# மசீஹா மாலை.

O-194MKN,M
N16
147367

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# மதினாபுரி மாலை.

இஃது

போடிநாயக்கனூர்

V. M. ஸெகண்டரி ஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்

மகா-ா-ா-ஸ்ரீ K. B. S. மணியபாரதி யவர்களின்

பிரதமமாணுக்கரும் ஹைஸ்கூல் மாணவருமான

M. H. கான் முகம்மது ராவுத்தரவர்களால்

இயற்றப்பட்டு

ஹையூர்

கிராமமுன்சிபு மகா-ா-ா-ஸ்ரீ

S. P. சுல்தான் அகமதுபாதர்தீன் ராவுத்தர்

அவர்களால்

ஹையூர்

ஹக்கீம் பிரஸ் என்னும் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கலுற்றது.

௵ 1916

காப்பி 1000

இதின் விலை] [அணா 2

# சிறப்புப்பாயிரம்

இஃது

போடிநாயக்கனூர் வி. எம். ஸெகண்டரி ஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ

## K. B. S. மணியபாரதியவர்கள்

இயற்றியது

---

### அகவல்.

துங்கவசகாங்க விங்கிதஞான
மோனர்டணிதரூஉந் தீனதயாளு
ஒப்புயர்வற்றே திப்பியப்பரிதியி
னொருதானாகி மருவியவல்கி
லுயர்திணையஃறிணைப் பெயரியவனைத்தினும்
பொலிவுறுநர்தலின் மலிசுடராமதி
தண்ணருணிறீய வொள்ளருமுதல்வன்
பன்னியநன்மறைத் தன்னுயிர்க்குறுவான்
உலகினருய்த்துணர்ந் திலகவனருட்பே
றெய்தும்பேறீஇ யுய்தரற்பொருட்டே — இவ்வையின்
அம்மறைவிரித்த ரூஉம்மதவாரணக்
கோட்டுயர்நித்திலஞ் சேண்புகநாட்டிய
நீணிறத்தம்ப மேனுனிமரீஇ
யுடுராமுழூஉஇப் படரொளிசெயூஉ
மாடமதின நாடதின்முன்றயே
நிதிக்கோலோச்சிய நிமலன்றாதர்
முடிபணர்தொழுகழ லடிமலர்வேந்தர்
சொல்லிசைவண்மையப் துல்லாவின்சுதர்
ஒற்றுமையாற்பிணிப் புற்றிடுதீன்குல
விளக்கமதைமுதற் றுளக்கியமாதவர் — அவர்மேல்
மாக்கடலுடுத்தவரைப் பிஞுடெவற்றினும்
பல்வளம்பெறீஇச் சொல்லுவமையறு

O-194 MKN, M
N16

பாண்டிநன்னாட்டின் காண்டிலதம்போன்ம்
முக்கனிகடந்த விக்குநனிவாவிப்
போந்துபணைதொறாஉஞ் சேந்தநற்சாலியுங்
கழையுங்கமுகுந் தழைப்புறவளர்த்தெழின்
மேவியிலகுறூஉ நாவிமென் குழலியங்
காமுலம்மையென் றோமிலரசியர்க்
இருக்கைபாமைவகைத் தருக்கள்குலாவும்
காசையம்பதியினன் மாசையமறுமனன்
தங்கியநலமிகு தீன்குலச்சிங்கம்
சீரார்குணமுகின் மீராங்கன்னிமால்
தருந்தவச்செல்வனின் பெருந்தனிப்புதல்வன்
உத்தமமாணவர் நத்துறுமிலக்கண
முற்றும்வாய்ந்துளப் பற்றொடுமெய்ம்முழை
யேகியோராண்டிற் பாகனதமிழ்க்கலை
செவ்விதிற்பயின்றநீலன்கவ்வைதீர்
மதனன்கான்முக மதுவெனும்பெயரினன்
மாமதினுபுரிமாலையெனவொன்றே
சொன்னயம்பொருணயமொன்றனையொன்றே
வெல்லுறுபான்மையிற் சொல்லினனஃதே
மன்னியவுலகியற் றுன்னலிலன்னவன்
வயதொடுமதிக்குஞ்செயலருந்திறத்ததே.
அத்தகைநூலை யாக்கியவவனை
இக்கலியுகத்திவண் புக்கவிருங்கலைத்
தேவப்புலவனென் றேவழுத்தற்றகும்— அந்நூல்
பல்லிடத்துள்ள பண்டிதபாமரர்
உள்ளவாதனத்தி னுறைதரல்வேண்டி
அம்மலர்க்காசைவீ யம்பதிகாரன்
ஆக்கியோன்சோதரி யார்க்கருங்காதலன்
சுல்தானகமது பத்ரதீன்வள்ளல்
பொருணனிசெலவிட் டருளொடன்
அச்சிட்டெவர்க்கு நச்சிநல்கினனே.

# சாற்றுக் கவிகள்.

இஃது
போடிநாயக்கனூர் V. M. மகா-ள-ள-ஸ்ரீ
## சுல்தான் அகமது பதரதீன் ராவுத்தர்
அவர்கள் இயற்றியது.

துங்கமதினாபுரிக்கரசர் தூயபாதந்தொழுதங்கல்
எங்கண்மரபுக்கோர்திலகமினியகவிகளெடுத்தோதும்
சிங்கமகான்முகமதென்பான் சிந்தைநாடித்தீஞ்சுவையே
தங்கமாலையொன்றுரைத்தான்சாற்றினிகரதற்கிலையே

இஃது
போடிநாயக்கனூர் வி. யம். ஸெகண்டரிஸ்கூல்
உபாத்தியாயர் வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ
## T. S. தண்டீஸ்வரம்பிள்ளையவர்கள்
இயற்றியது

தருமதனாதிபதிகள்மருங்காசைவாசனரசரெலாமெச்ச
வருமதனாவல்லவனாங்கான்முகமதெனுமேதகையன்வண்மைமேவுந்
திருமதினாபுரிமாலையெனுந்தெய்வப்பாவினத்தைச்செய்தானன்பாற்
பெருமதனாரியன்றிறமிதெனப்புலவரிப்பூவிற்பேசொணாதே.

இவை

போடிநாயக்கனூர் வி. யம். ஸெகண்டரி ஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்

மகா-ள-ள-ஸ்ரீ K. B. S. மணியபாரதியவர்களின் மாணவர்

மகா-ள-ள-ஸ்ரீ வித்வான்

## காட்டைநைனார்ராவுத்தரவர்கள்

இயற்றியன

சீருலவுகன்னலினமுயிர்த்திடும்வெண்ணித்திலமுஞ்செழுமைவாய்ந்த
நீருலவுதடங்களுறைகமலமலருதவுமுத்துநிலவுசெய்யும்
ஏருலவுமங்காசைநகரிழைத்தபெருந்தவத்தாவிலங்கவந்தோன்
பாருலவுபுகழ்சான்றபுண்ணியவான்கண்ணியவான்பண்பின்மிக்கான்

கான்பெருக்குமலர்த்தெரியற்கான்முகம்மதெனுநாமக்கவிவல்லோனே
வான்பெருகுமதினபுரிநாயகரின்வண்மையடிமலரேபோற்றித்
தேன்பெருகுமுபர்மாலைபொன்றுசொற்றனதற்குநிகர்செப்பினுண்
மீன்பெருகுகடலுடுத்தநானிலத்துமேனிலத்தும்விளம்புவீரே. [லோ

இஃது

போடிநாயக்கனூர்

வி. யம். ஸெகண்டரி ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ

K. B. S. மணியபாரதியவர்களின் மாணவர்

வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ

## V. S. ஷேக் அப்துல் காதிரவர்கள்

இயற்றியது.

சீரோங்குந்தென்காஞ்சித்தீன்குலத்தோர்தொழுதேத்துஞ்சிறந்தமோனப்
பேரோங்குமதினபுரிமுஹம்மதுவின்மாலைதனைப்பெட்புவாய்ந்த
நீரோங்குங்கான்முஹம்மதன்புடனிங்கெடுத்துரைத்தானிகழ்த்தினம்மா
ஏரோங்கும்வாணவரின்றெள்ளமுதமதற்குமுனர்நிகராகாதே.

இஃது
போடிநாயக்கனூர்
ஸி. யம். ஸகண்டரி ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ
K. B. S. மணியு பாரதியவர்களின் மாணுக்கரும்
ஷை ஸ்கூல் மாணவருமான பூதிப்புரம்

## ஸ்ரீ. பழனிச்சாமி செட்டியார்

இயற்றியது.

திருவளரும்புகழ்பெருகுதென்காசைமாநகர்வாழ்திரண்டசெல்வன்
மருவளருமெழிற்புயத்தான் றீனமாபில்வந்திடுகோன்மகம்மதன்பாய்த்
தருவளரும்பொழிற்சூழ்தபதினபுரிக்காவலர்தந்தாளைப்போற்றி
அருவளருமதுவன்னபாமாலையொன்றுசொணைதற்கிடென்னே.

இஃது
போடிநாயக்கனூர்
ஸி. யம். ஸகண்டரி ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ
K. B. S. மணியபாரதியவர்களின் மாணுக்கரும்
ஷை ஸ்கூல் மாணவருமான

## V. மல்லையன் செட்டியார்

இயற்றியது.

றேன்னிருக்குமதினகர்முஹம்மதுவின்மலர்ப்பதத்தின்மோகமுற்றே
தென்னிருக்கும்வளப்பெருகுதேப்பொழில்சண்பேவுபலர்சிந்துந்தே
இன்னிருக்குந்தென்காசைதனில்வாழுங்கான்முகமதினிதுகூறும்[றல்
மின்னிருக்கும்பாமாலைதனக்குநிகர்வானமுது [illegible]

இஃது
போடிநாயக்கனூர்
வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ
## ஆ. ஷண்முகம் பிள்ளையவர்கள்
இயற்றியது.

அனங்கனைக்குகனையொருவரீடுரைபாவெழில்வாய்ந்தோனங்கண்டுஞ்
சனங்களைக்குமாடவரிசைகணிறைதென்காசைக்கணியாய்மாற [சக்
னினங்களைக்குமுறைபதியாயுற்றிங்கான்முகமதெனுமேந்தலின்றோர்
தனங்களைக்குந்திருமதிணுபுரிமாலைமுகமதுவின்றூட்கிட்டானல்

இஃது
திருமலாபுரம் மகா-ள-ள-ஸ்ரீ
## அ. ஆ. முத்துசாமிக்கவிராயரவர்கள்
இயற்றியது.

தீன்மரபிற்கொருதிலகந்திகழுமெழிற்றென்காசைச்செல்வம்தூய
கான்முகமதெனுமேகங்கலைக்கடனீரதைமொண்டுகவிவலோர்முன்
வான்மருவுகோரிவளமலிமதிணுபுரிமாலைமழைபெய்யக்கல்
லான்மருவுகோடையகன்றன்புநிலைப்பயிர்வளர்ந்துலாவிற்றம்மா

## அவையடக்கம்.

தரைக்கணியாய்ச்செந்நெலொடுகன்னல்வளர்திருமதிணுசான்றோர்மா
உரைக்கவெனவிழைந்துமிகயானுற்றவுள்த்துணிவையுன்னிலம்மா [லை
கரைக்கருகிலுளவருகின்றலைமேவற்கேலாதகங்கைவாளை
துறைக்கரியவானுடுவைச்சேரநனிபாயமனஞ்சூழ்வதொக்கும்

௯ ௦ ௱ ௧௦௫ ம் ௦

بسم الله الرحمن الرحيم

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# மதினாபுரி மாலை.

## காப்பு—வெண்பா.

பாரிற் சிறந்த பதீமதீனா வேந்தரது
பேரிற்சிறியோன் பிரியமுடன்—ரோருதுதி
யோதக்கருணையோடு முன்னிதஞ்சேர் நாற்கவியு
மாதியே தந்தென்னை யாள்.

## நூல்.

### கட்டளைக்கலித்துறை.

திருமதினாபுரியின்முறைசெய்திடச்செற்பமிந்த
திருமதினாற்புறமுஞ்செறிமக்கத்தினிற்சுடர்மு
திருமதினாணுமுகத்தோடுதித்தநற்றேவரீர்க
திருமதினாருடபாதந்தொழின்முத்திசித்திக்குமே. 1

சித்திரப்பாவையையொத்தவணுண்மலர்த்தேங்கமழ்நி
சித்திரப்பாசக்குழற்கதிஜாவின்றிநபணத்தீர்
சித்திரப்பார்க்கருட்செய்துநன்முத்தியிற்சேர்த்திடும்வி
சித்திரப்பாதத்திகழ்மதினாபுரித்தேசிகரே 2

கண்டனமாற்றலழிநடைக்கார்குழற்காரிகையர்
கண்டனமாற்றஞ்செவியுற்றுமையலின்காலுழன்றே
கண்டனமாற்றருமின்பமதன்றெனக்காமவிடர்க்
கண்டனமாற்றவருண்மதினாபுரிக்காவலரே. 3

வந்தனந்தந்தாங்கெதிரளிக்கும்வகைமாண்பறியேன்
வந்தனந்தன்சிறகேபலர்த்தும்பொன்மலர்கழ
வந்தனந்தத்துவமன்றென்றறிந்துமனமிருந்து
வந்தனந்தம்பேர்தொழுமதிநுபுரிவள்ளலீரே. 4

மானவரஞ்சிதச்செய்கையிறகுன்மறைபருள்பெம்
மானவரஞ்சிதத்தாடொழன்மாண்பென்னவாழ்த்திவன
மானவரஞ்சிதநும்பருள்வேண்டமகிழ்ந்ததிற்சன்
மானவரஞ்சிதரின்மதிநுபுரிமன்னவரே. 5

கொற்றருமண்டுபோர்ப்பல்லாவிநீக்குங்கொடுந்தொழிலார்
கொற்றருமன்றனைநேரயிலேந்துகைக்கொள்ளுவீரிங்
கொற்றருமந்தமறைக்கெனவந்தருலவுபொன்னூர்க்
கொற்றருமம்புகழ்செய்மதிநுபுரிக்கொற்றவரே. 6

மன்றந்தருந்திருமேனிவிளங்கமகிழ்விநோடே
மன்றந்தலைப்படுமாவிபதைத்திடுமாறுபோலு
மன்றந்தருக்கான்மறவன்வலைதனின்மான்றுயர்ச்சு
மன்றந்தருளியவண்மதிநுபுரிபாதவரே. 7

மஞ்சந்தருங்கையிர்காணிகல்வேந்தும்வணங்குபெரு
மஞ்சந்தழுவியமன்னீர்புறக்கான்மறையருணே
மஞ்சந்தமுகம்பதீர்சைனபோடுமலர்குலவு
மஞ்சந்தனிற்றிகழ்மாமதிநுபுரிவண்மையரே. 8

தனங்கனந்தான்கொளநித்தமுநாடித்தளருமிம்
தனங்கனந்தாதருளும்பதப்போதுதனித்துர்தரே
தனங்கனந்தாழ்குழற்கன்னியர்சாமரைதான்றரவா
தனங்கனந்தாதியொளிர்மதிநுபுரித்தற்பரரே. 9

பறக்கத்தளிக்குமிறையவன்றாதீர் பசுங்கடலாப்
பறக்கத்தளிகுலஞ்சேர்வனத்துற்றுப்படுத்தலுக்கொப்
பறக்கத்தளிக்குளிர்சாகரமேடர்பவங்களையும்
பறக்கத்தளிக்குவிலாம்மதிநுபுரிப்பார்த்திபரே. 10

மருக்கஞ்சமலருயிர்த்த திருமார்மணித்தொடைகா
மருக்கஞ்சருவும்புயத்தீர்சிறிதும்வருகிறச
மருக்கஞ்சலிலாமனத்திருத்விடும்வாழ்த்துமென்ற
மருக்கஞ்சரணமொண்டாமதிஞபுரிவாய்மையரே. 11

சரசக்கதிசாதிமணியார்மாதர்தன்மையற்போச்
சரசக்கதிசாரநண்ணியதாலருட்டந்திடுங்கஞ்
சரசக்கதிசால்விழியாள்குவலீதரசுபெற்ற
சரசக்கதிசாமகிழ்மதிஞபுரித்தன்னியரே. 12

தனந்தங்கனந்தள்ளிநன்மையுண்டென்றுசசியையிகந்
தனந்தங்கனந்தமருங்கதிர்வீசிடுந்தண்ணெழில்வ
தனந்தங்கனந்தனடையராலத்திசெய்தார்க்கபோய்
தனந்தங்கனந்தவிற்சீர்மதிஞபுரிச்சான்றவரே. 13

பாதகமலஞ்செறிமறவன்வலைப்பட்டனலொப்
பாதகமலருஞ்செங்கதிரிற்புழுப்பான்மையிற்றப்
பாதகமலனுறுமான்பிணிநின்றுபண்பொடுமெம்
பாதகமலந்தருமதிஞபுரிப்பார்த்திபரே. 14

தாவிக்குதிக்குமன்னங்களாற்றுதவிழ்தண்ணமுதந்
தாவிக்குதிக்குமலர்ப்பதத்தீர்பகைதான்செய்வோர்
தாவிக்குதிக்குப்பிரமையிலேவலீர்சரண்பெறநந்
தாவிக்குதிக்குப்புகழ்மதிஞபுரித்தார்மனரே. 15

தருணமதின்மழையிட்டிக்குடிகடவிப்பிணிநீத்
தருணமதிவீசியபற்போக்கலிற்புனற்றுராணிமாந்
தருணமதிகொடுத்தஞ்ஞானவிருளைத்தள்ளியுவந்
தருணமதிஞபுரிநாயகர்துதிசாற்றுமினே. 16

கவனங்கலந்தவையொன்றிலாக்காற்றங்கையின்பரிவாற்
கவனங்கலந்தாவுட்களிப்பீபவாகார்குழன்மே
கவனங்கலந்தமணியணியாமிருகண்டமணிப
கவனங்கலந்தனிற்போமதிஞபுரிக்கண்ணியரே. 17

சுவர்க்கத்திருந்துமினாட்பெருமேருவுந்தோற்கநிமிர்
சுவர்க்கத்திருமாதரைமணமாற்றத்துகளிலாத
சுவர்க்கத்திருங்கரியேறியசேவைத்துணைநல்குமஞ்
சுவர்க்கத்திரவியஞ்சேர்மதினாபுரித்தூயவரே. 18

சாதனந்தங்குதிருப்புயத்தார்வெஸ்சசிக்கநிர்வீ
சாதனந்தங்குலவுஞ்சுழலத்திருக்கண்மறைநபார்
சாதனந்தங்குடிகொண்மதினாபுரித்தாயரென்னெஞ்
சாதனந்தங்குதிமேவத்தகுமெனச்சாருவரே. 19

தருமஞ்சலியார்கடைநால்வரோடுதாரணியாள்வேந்
தருமஞ்சலியாதினுக்குமில்லண்டருங்காடொமுருகுங்
தருமஞ்சலியாதுசெய்திடுவள்ளலீர்தண்ணைபொருந்
தருமஞ்சலியாபுகழ்மதினாபுரித்தார்மனரே. 20

கஞ்சத்தனத்தினர்மூடர்மருங்கிலெக்காலினுமி
கஞ்சத்தனத்தினவமென்றறிகிலேன்காசுமலை
கஞ்சத்தனத்தினல்லார்க்கிட்டனையேகருபமேதேக்
கஞ்சத்தனத்தினஞ்சேர்மதினாபுரிக்கப்பீபரே. 21

வணமாதருக்குப்பொருளிடும்புல்லர்கண்மண்டைகொதி
வணமாதருக்குமிகுந்தசனவெங்கதிர்வாட்டிடுங்கால்
வணமாதருக்குலமேற்சபாஅத்தருள்வார்நலஞ்சு
வணமாதருக்குடிகொண்மதினாபுரிவல்லவரே. 22

தினகரமாவேலசேனுசேனேற்றுஞ்செழுங்கொடைநத்
தினகரமாதவத்தீர்முகிற்கூட்டஞ்செறியுமக்கத்
தினகரமாந்தர்திலகமாமப்துலாசேயிர்நிலத்
தினகரமாட்டாவளமதினாபுரித்தேவரீரே. 23

மாற்றங்களையாதுமின்றறைந்தும்மைமனத்தினேற்ற
மாற்றங்களையாதுமின்றூடாமலும்வைகலையா
மாற்றங்களையாதருண்மதினாபுரிமாதவீர்நும்
மாற்றங்களையாமுளவிருணீங்கிடின்மாண்புமக்கே. 24

கத்திரிக்காய்த்துற்செயலிழைத்தார்க்குமிக்காலமதில்
கத்தரிக்காயமாக்கித்தமியேனின்கடும்பவத்தைக்
கத்திரிக்காதுறைதறுகியாதெந்தனின்கன்மமதே
கத்தரிக்காநேரகழ்மதினாபுரிக்காருண்யரே. 25

கண்டங்கலங்கலயிற்கமலப்பொன்கரத்திலேந்திக்
கண்டங்கலங்கலுழ்நன்மணியார்நனிகாவலீர்நீர்
கண்டங்கலங்கடும்பாவக்கடலைக்கடக்கவென்றெங்
கண்டங்கலங்கவருண்மதினாபுரிக்காதலரே. 26

தங்கத்திருவளச்சொர்க்கத்திற்பின்னுடனிற்றமியேன்
தங்கத்திருவளர்பாதங்கருவீர்தனிக்கதிர்மா
தங்கத்திருக்கோட்டுறைமணித்தொங்கலீர்சாரிசைவே
தங்கத்திருமணீர்மாமதினாபுரிச்சான்றவரே. 27

தாமதமாற்றம்புவிக்கீந்துகொள்ளார்தமைக்கடிந்தே
தாமதமாற்றித்திசழ்மதினாபுரிததார்மனர்கத்
தாமதமாற்றற்கரியிறையோர்துதிசாற்றவின்னுந்
தாமதமாற்றதுகொல்லோவெனதுதமரர்களே. 28

காமருதந்தத்தழுத்தொளிர்வாட்படைகாணுவதற்
காமருதந்தங்கணில்விழக்கைமண்கடிதெறிந்து
காமருதந்தருளென்பார்க்குதவிக்களிப்பளிக்குங்
காமருதந்தவழ்மாமதினாபுரிக்காவலரே 29

வஞ்சக்கரவபுரிவார்குடிஞரிப்பானிலத்த
வஞ்சக்கரம்பயில்வேலினர்மையலார்மாய்த்தொளிரும்
வஞ்சக்கரங்கொளுமாண்புடையார்மனர்வாழ்த்திடுசெல்
வஞ்சக்கரமணிமாமதினாபுரிவாசவரே. 30

மதினாபுரிமாலை முற்றுப்பெற்றது.

# அறிவிப்பு.

சீக்கிரம் இந்நூலாசிரியர் செய்த ஏகபாதக்கட்டளைக்கலித்துறை நாயகர் அந்தாதி வெளிவரும்.

இந்நூலாசிரியர் தனது ஆசிரியரால் செய்யப்பட்ட மதனசுந்தரன் என்ற ஒரு நவீன கதையை நாடக ரூபமாக நடத்தக்கருதி இனிய பாட்டுகளியற்றி போடிநாயக்கனூர் வி. யம். ஸெகண்டரி ஸ்கூல் மாணவர்களைக் கொண்டு உசிலம்பட்டி டிவிஷன் டிப்டி கலெக்டரவர்கள் முன்னிலையிலும் ஷை போடிநாயக்கனூர் மகா-ா-ா-ஸ்ரீ ஜமீன்தாரணியவர்கள் முன்னிலையிலும் நடித்துக்காட்டிய "மதனசுந்தரம்" என்னும் நாடகம் சீக்கிரம் வெளிவரத் தயாராயிருக்கிறது.

**V. S. S.**


## 'HAKKEEM' PRESS BODINAYAKANUR.

'ஹக்கீம்' பிரஸ் போடிநாயக்கனூர்.

இப்பெயர்பூண்ட அச்சுக்கூடம் 1913௵ மேமாதமுதல் ஸ்தாபிக்கப்பட்டு நடந்தேறிவருகின்றது.

இவ்வச்சுக்கூடத்தில் இங்கிலீஷ் தமிழ் முதலிய பாஷைகளில் புஸ்தகவேலைகளும், பிரகடனங்கள், விவாஹபத்திரிக்கைகள், பில், செக், இரசீது மற்றுமனேகவேலைகளும், அவைகள் சுத்தமாகவும், ஒழுங்காகவும், சீக்கிரமாகவும் செய்துகொடுக்கப்படுமாதலால் இதைக்கண்ணுறும் யாவரும் தங்கள் தங்கள் வேலைகளை அடியிற்கண்ட விலாசத்திற்கு அனுப்பி முடித்துக்கொள்ள வேண்டுகின்றனன்.

ஒ. ெ. பீர் முஹம்மது ஸாஹிப்,

புரோப்ரைட்டர் ஹக்கீம் பிரஸ் போடிநாயக்கனூர்.